**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்</u>**

DVC.No.09/2025

தேதி: 12.02.2026

**<u>பு..சா.1– வினுதா , க/பெ. விஸ்வநாதன்</u>**

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**1.** முதல் விசாரணை வாக்குமூலம் நான் சொல்லி தான் வழக்கறிஞர் தயார் செய்தாரா என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் நகை பணம் கேட்டு தொந்தரவு செய்ததாக தேதி குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் தேதி சொல்லவில்லை குழந்தை இறந்தபிறகு கேட்டார். திருமணத்திற்கு பிறகு எதிர் மனுதாரர் வீட்டில் தான் சந்தோசமாக இருந்தோம் என்றால் சரிதான். குடும்ப சண்டை சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகாா கொடுத்தேனா என்றால் இல்லை என் கணவர் வேண்டுமென்பதால் கொடுக்கவில்லை.

2. திருமணத்தின் போது எனக்கு போட்டதாக சொல்லப்படும் நகைக்கு ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. திருமணத்திற்கு போட்ட நகைகளுக்கு ரசீது இல்லை. திருமணத்திற்கு எனது கணவர் நகை எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு எனது வீட்டில் நகை போட்டார்கள் அதன்பிறகு கேட்டார். ஜனனி என்ற முதல் பெண்குழந்தை முசிறியில் தனியார் பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வருகிறார். குழந்தைக்குண்டான தேவைகள் அனைத்தும் எதிர்மனுதாரர் தான் செய்து வருகிறார் என்றால் இல்லை நான் தான் செய்து வருகிறேன்.

3. நான் எத்தனை வருடமாக தனியார் நகைக்கடையில் வேலை செய்கிறேன் என்றால் ஒரு வருடமாக வேலை செய்து வருகிறேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு பின்னிட்டு தான் நான் நகைக்கடைக்கு வேலைக்குச் சென்றேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு கரூரில் வேலை பார்த்தேன். எதிர்மனுதாரர் காய்கறி வியாபாரம் செய்து வருகிறார் என்றால் சரிதான் போலிரோ பிக்கப், வாகனமும், ஓம்னி வாகனமும் டிராவல்ஸ் தொழில் செய்து வந்தார் டிரைவராகவும் செல்வார்.

4. எதிர்மனுதாரர் டிராவல்ஸ் மற்றும் டிரைவர் வேலை செய்து வரவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வாரச்சந்தையில் சிறிய அளவில் காய்கறி வியாபாரம் செய்துஎன்னையும், எனது குழந்தைகளையும் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ விரும்புகிறார் என்றால் இல்லை எனக்கு ஆண் வாரிசு இல்லாததால் எதிர்மனுதாரர் மேட்டுமகாதானபுரத்தை சேர்ந்த ஜோதி என்பவரைத் திருமணம் செய்து கொண்டு பேன்சி ஸ்டோர் வைத்து நடத்தி வருகிறார்.

5.	நான் வழக்கிற்காக எனது கணவர் 2வது திருமணம் செய்துவிட்டதாக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவர் நான் பிரிந்து செல்லும் வரை என்னை சந்தோசமாக வைத்திருந்தார் என்றால் சரியல்ல வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்துக்கொண்டு என்னை அடித்து துன்புறுத்தினார் கடன் இருப்பதாக கூறி எனது பெற்றோர் வீட்டில் பணம் வாங்கிவருமாறு தொந்தரவு செய்தார். எனது பெற்றோர்கள் போக்கியத்துக்கு சிறுகமணியில் 1 ஏக்கரில் விவசாயம் செய்து வருகிறார்கள்.

6.	போக்கியத்திற்கு வாங்கி விவசாயம் செய்யும் போது வருமானம் சராசரியாக கிடைக்கும். எனது பெற்றோர்கள் வயது முதிர்வின் காரணமான வீட்டில் இருந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விவசாய வேலை செய்ய மாட்டார் ஆள் வைத்து வேலை வாங்கிக்கொள்வார்கள். என்னுடைய நடவடிக்கை சரியில்லாததததை எதிர்மனுதாரர் கண்டித்தால் தான் நான் வீட்டை விட்டு வெளியே சென்றேன் என்றால் இல்லை அவர் வேறு பெண்ணுடன் தொடர்பில் இருந்தார். நான் சில ஆண் நண்பர்களுடன் தொலைபேசியில் பலமணி நேரம்பேசும் வழக்கம் வைத்திருந்தேன் என்றால் என்னிடம் தொலைபேசி அப்போது இல்லை.

7.	நான் பேசியதை என் கணவர் தட்டிக்கேட்டதால் நான் வீட்டைவிட்டு சென்று விட்டேன் என்றால் சரியல்ல. நான் போன் வைத்திருந்தேன் என்றால் சரியல்ல பேசிய விவரங்கள் எனது கணவரிடம் உள்ளது என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தேதி மாதம் நேரம் குறிப்பிட்டு மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் கணவர் வேண்டுமென்பதற்காக எதையும் தெளிவாக சொல்லவில்லை.

8.	நான் அடித்ததாக சொல்லப்படுவதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்கு ஆவணம் இல்லை. கரூர் குடும்ப நல கோர்ட்டிலேயே என்னை அடித்தார் அதற்கு 15 நாட்கள் ரிமாண்ட் செய்து ஜெயிலில் இருந்தார். குடும்ப நல நீதிமனறத்தில் நான்எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதாக மனு செய்திருந்தேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரரை எனது ஆண் நண்பர்களுடன் சேர்ந்து கொலை செய்ய திட்டம் போட்டேன் என்றால் பொய்யானதாகும். எதிர்மனுதாரர் செய்த தவறை மறைப்பதற்காக என் மீது பழி போடுகிறார்.

9.	நான் சொல்வது போல் எதிர்மனுதாரர் எந்த குற்றமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னை எதிர்மனுதாரர் நகை, பணம் கேட்டு துன்புறுத்தவில்லை எ ன்றால் சரியல்ல. நான் செய்த தவறை மறைப்பதற்காக

எதிர்மனுதாரர் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் யாரையும் திருமணம் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிர்மனுதாரர்க்கும் சம்பந்தம் இல்லையென்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.13 10:42:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.